செ.வெ.எண்: 36 நாள்:15.08.2019

# அரியலூரில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அரியலூர் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெற்ற **"சுதந்திர தினவிழாவில்"** இன்று (15.08.2019) காலை **9.05** மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் **தேசியக் கொடியை** ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ச்சியாக, சமாதான புறாக்களை பறக்கவிட்டு, காவல்துறையினர் மற்றும் பள்ளிதேசிய மாணவர் படை மற்றும் இதர படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பின்னர், இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்களது வாரிசுதாரர்களுக்கும் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளருடன் கைத்தறி ஆடைகளை அணிவித்து கௌரவித்தார்.

தொடர்ந்து, காவல் துறையில் சிறப்பாக பணிபுரிந்த 15 காவல் துறையினருக்கும், அரசுத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 86 அரசு அலுவலர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு பதக்கங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.45 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பில் வங்கி கடனுதவிக்கான காசோலைகளையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.16 ஆயிரம் மதிப்பில் வேளாண் இடுபொருட்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 5 ஆயிரத்து 724 மதிப்பில் உதவி உபகரணங்களையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 140 பயனாளிகளுக்கு ரூ.44 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பில் வங்கி கடனுதவிக்கான காசோலைகளையும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பில் தோட்டக்கலை பயிர் இடுபொருட்களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 22 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 15 ஆயிரத்து 500 மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் மூலம் 10 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 69 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் 38 பயனாளிகளுக்கு ரூ.19 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.36 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும் என ஆகமொத்தம் **243 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 23 இலட்சத்து 42 ஆயிரத்து 224** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள். மேலும்,

மேலும், 6 பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளான, அஸ்தினாபுரம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், அரியலூர் அரசுநகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில் சமூக விழிப்புணர்வு நடனமும், அரியலூர் நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில் நாட்டுப்பற்று நடனமும், ஜெயங்கொண்டம் பாத்திமா பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், வரதராஜன்பேட்டை தொன்போஸ்கோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சார்பில் சமூக விழிப்புணர்வு நடனமும் நடைபெற்றன. இக்கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

பின்னர், மரங்களை வளர்ப்போம், மனங்களை காப்போம் என்ற சோலைவனம் அமைப்பின் சார்பில் 5 நிமிடத்தில் 500 மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பெரியய்யா, மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை சுந்தர்ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தா.பரிதாபானு, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி, வட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள், கல்வித்துறை, வருவாய்துறை, வளர்ச்சிதுறை, காவல்துறையினர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**